# மாற்றுப் பாதையைத் தேர்ந்தெடுத்து சாதித்த பாரத்



எஸ்.வெங்கடேஷ்வரன்

வழக்கமான பாதையை விடுத்து, பலரும் சென்றிராத வழியைத் தேர்ந் தெடுத்து, துணிச்சலாகவும் தன்னம் பிக்கையுடனும் செல்வோர் சிலரே. அத்தகையோரில் ஒருவர் வர்த்தகத் தொழில் தகவல் தொழில்நுட்பப் பாடத்தில் பட்டயக் கல்வி பயின்ற பாரத் செல்லதுரை, 24 (படம்).

நன்யாங் பலதுறைத் தொழிற்கல் லூரியில் வர்த்தக, தகவல் தொழில் நுட்பத் துறையில் 3.7 தரப்புள்ளி களுடன் (ஜிபிஏ) பட்டயச் சான்றிதழைப் பெற்ற திரு பாரத், அடுத்து பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருக்க முடியும்.

ஆனால், பட்டப்படிப்பை மேற்கொள் ளாமல் வேலை செய்துகொண்டே கற்கும் ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சம்பாதித் தல், கற்றல் திட்டத்தைத் (Skillsfuture Earn and Learn Programme) தேர்ந்தெடுத்தார். அத்திட்டத்தின் மூலம், புகழ்பெற்ற 'அக்சன்சுவர்' நிறு வனத்தில் சேர்ந்து வேலை அனுபவம் பெற்று வருகிறர் திரு பாரத்.

துறை சார்ந்த செயல்திறன்களைப் பெறுவதற்காகவும் குடும்பத்திற்குச் சுமையாக இருந்துவிடக்கூடாது என் றெண்ணியும் பட்டயக் கல்வியை முடித்ததும் பல்கலைக்கழகம் செல்லா மல் 'இஎல்பி' திட்டத்தைத் தேர்வு செய்தார் இவர்.

தற்போது தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுத் துறையில் சிறப்பு பட்டயக் கல்வி (specialist diploma) பயிலும் இவர், அக்சன்சுவர் நிறுவனத்தில் ஓராண்டு வேலைப் பயிற்சி பெறவேண் டும். இவ்வாண்டு அக்டோபரில் பயிற் சியை முடித்த பிறகும் அந்நிறுவனத் திலேயே தொடர்ந்து பணியாற்ற இவர் விரும்புகிறார்.

"அக்சன்சுவர் மூலம் திறமையான வர்களுடன் இணைந்து வேலைசெய் யும் வாய்ப்பு கிடைத்தது. வாடிக்கையா ளர்களை அணுகுவது எப்படி, அவர் களுடன் உரையாடுவது எப்படி உள் ளிட்ட பலவற்றைத் தெரிந்துகொண்டு, ஆற்றலை வளர்த்துக்கொண்டேன்," என்றார் திரு பாரத்.

எதிர்காலத்தில் பட்டக் கல்வி பயில விரும்பும் இவர், அப்போது 'இஎல்பி' திட்டத்தில் கிடைத்த அனு பவங்கள் நிச்சயமாகக் கைகொடுக்கும் என்றும் நம்புகிறார். சிங்கப்பூரர்களின் திறன்மேம்பாட்டிற்காக உருவாக்கப் பட்ட 'ஸ்கில்ஸ் ஃபியூச்சர்' திட்டத்தின் ஓர் அங்கமே 'இஎல்பி' திட்டம்.

இந்தத் திட்டம், தொழில்நுட்பக் கல்விக்கழக, பலதுறைத் தொழிற் கல்லூரி பட்டதாரிகள், தாங்கள் கற்ற வற்றைச் செயல்படுத்த வாய்ப்பு அளிப் பதுடன், அவர்களின் திறன்களை மேம்படுத்தி, வாழ்க்கைத்தொழிலுக்கு ஆயத்தப்படுத்துகிறது.

'இஎல்பி' திட்டத்தின்கீழ் மேலும் ஐந்து புதிய பாடப்பிரிவுகளை நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரி அறிமுகம் செய்துள்ளது. இதுவரை 420க்கும் மேலான பட்டதாரிகள் இத்திட்டத்தி னால் பலன் அடைந்துள்ளனர்.

"வாழ்க்கைத்தொழிலில் வெற்றிபெற பட்டறிவு மட்டுமின்றி, தொழிற்சார்ந்த தேர்ச்சிகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதை உணர்ந்துள்ளோ ருக்கு இப்பாதை நிலைத்திருக்கக் கூடிய மாற்று வழியாக அமைகிறது," என்று நன்யாங் பலதுறைத் தொழிற் கல்லூரியின் வாழ்நாள் கற்றல், திறன் கள் கழகத்தின் தலைமை நிர்வாகி திரு டான் ஜெக் மின் குறிப்பிட்டார்.